# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,
## பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின்
## தலைமையதிகாரி (நீக்கல்) சட்டம்

---

**[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 2026 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி (நீக்கல்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 11/2025

**2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி (நீக்கல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்கல்

2. 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

நிலைமாறுகால ஏற்பாடுகள்

3. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் முற்போந்த நாளன்று-

(அ) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியாக; அத்துடன்

(ஆ) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிக் குழு உறுப்பினரொருவராக,

பதவி வகிக்கும் ஆளொவ்வருவரும் இச்சட்டம் தொடங்கும் நாளிலிருந்து அத்தகைய பதவியை துறத்தல் வேண்டும்.

(2) (இதனகத்துப்பின்னர் “நீக்கப்பட்ட சட்டம்” என குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டத்தின் நீக்கம் எது எவ்வாறிருப்பினும் –

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் முற்போந்த நாளன்று பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியின்

அலுவலகத்தில் சேவைபுரியும் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும் அத்துடன் –

(i) ஆயுதந்தாங்கிய படைகளில் உறுப்பினர் களாக இருப்பவர்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அந்தந்த ஆயுதந்தாங்கிய படைகளில் தமது சேவைக்கு குறித்தளிக்கப்படல் வேண்டும்;

(ii) பொலிஸ் படையில் உறுப்பினர்களாக இருப்பவர்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கை பொலிஸில் தமது சேவைக்கு குறித்தளிக்கப்படுதல் வேண்டும்;

(iii) சிவில் பாதுகாப்பு படையின் உறுப்பினர் களாகவிருப்பவர்களிற்கும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் தமது சேவையை ஆற்ற குறித்தளிக்கப்படுதல் வேண்டும்;

(iv) பொதுச் சேவையிலுள்ள ஆட்களுக் கிடையேயிருந்து பணிக்கமர்த்தப்பட்ட சிவில் ஆளணியராகவுள்ளவர்கள் பொதுச் சேவையிலுள்ள அவர்களின் எந்தந்த பதவிகளுக்கு குறித்தளிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டு அத்துடன் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் முற்போந்த நாளன்று ஏலவேயுள்ள பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியின் எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்கள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் எல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பாதுகாப்பு என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சிற்கு மாற்றப்படுதல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடரப்பட்டு, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள அனைத்து துடர்ச்சிகள் வழக்குகள் அல்லது சட்ட நடவடிக்கைகள் என்பன இச்சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய நீக்கம் எதுவும் இல்லாததுபோல் விசாரிக்கப்பட்டு முடிவாக்கப்படல் வேண்டும்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியால் அலுவலக ரீதியாக செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளாக கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(உ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளில் அமுலிலுள்ள மற்றும் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி அல்லது விதி ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

4. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலன்றி –

"ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம் மற்றும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம் என்பவற்றின் கீழ் முறையே திரட்டப்பட்ட மற்றும் பேணப்பட்ட தரைப்படை, கடற்படை அத்துடன் வான்படை என்று பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின், சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்ெகாள்ள முடியும்.